மலர் : 11 இயேசுகிறிஸ்துவே கர்த்தர் இதழ் : 12
தனிப்பிரதி ரூ. 3

# HUNDRED VILLAGE MINISTRY

ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி
हन्ड्रड विलज मिनस्ट्री
ഹണ്ഡ്രഡ് വില്ലേജ് മിനിസ്ട്രി

**அக்டோபர் 2011**

ஆண்டுசந்தா இந்தியா ரூ.25 வெளிநாடு ரூ.

# 100- கிராம ஊழியம்

TAMIL VILLAGE GOSPEL MISSION – மாதாந்திர அறிக்கை




**TVGM - 2011 அக்டோபர்**
**கர்த்தரின் வாக்குத்தத்தம்**

## நித்திய கிருபையுடன் உனக்கு இரங்குவேன்.

**ஏசாயா 54 : 8.**

கர்த்தருடைய கிருபையினால் திருச்சி – **சூறாவளிப்பட்டி** கிராமத்தில் 15’ X 30’ அடியில் கான்கிரேட் ரூப்புடன் ( ரூ. **4,50,000** செலவில் ) **TVGM ஆராதனை / சமூகக்கூடாரம்** அமைக்க விசுவாசத்தில் 02.09.2011 அன்று கோடிட்டு ஜெபித்தோம். கர்த்தருக்குச் சித்தமான நேரம் ஜெபத்துடன் அஸ்திபாரம் தோண்டப்பட ஜெபியுங்கள்.



**இங்கு பணிபுரிய ஒரு மிஷனெரி குடும்பம் தேவை. ஜெபியுங்கள்!**

# இயேசுகிறிஸ்துவே கர்த்தர்



**ஸ்டீபன் கிறிஸ்டோபர்**
மேனேஜிங் டிரஸ்டி
**Cell : 94449 80445**



P.T. **கிறிஸ்டோபர்**
TVGM ஸ்தாபகர்
**Cell : 94435 44628**

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே !

இந்த மாதத்தில் **நித்திய கிருபை உங்கள்மேல் இறங்குவதாக !**

கர்த்தருடைய கிருபையினால் 2011 ஆகஸ்ட் 22 அன்று **பிஷப் ஜோசப் ஜெபமணி** ( சிங்கப்பூர் ) அவர்கள் **மகள் பிரியாவுடன்** TVGM க்கு வந்து தாங்கள் ஜெபவீடு கட்டிக் கொடுத்த ஊழியர்கள் 43 பேரில் 23 பேரை நேரடியாக பார்வையிட்டு தேவசெய்தியளித்தார்கள். அனைத்து ஊழியர்களும் **பிஷப் ஐயாவை** பொன்னாடை போர்த்தி, அன்பளிப்புகள் வழங்கியும், காணிக்கைகள் செலுத்தியும் கனப்படுத்தினார்கள்.

U.K- Illford லிருந்து **சகோ. செல்வா , ராஜன்** குடும்பத்தினரும் , **சகோ. அனசிலின்** தம்பதி / குடும்பத்தினரும் TVGM-ஐ நேரடியாக பார்வையிட்டு ஜெபித்து தேவனை மகிமைப்படுத்தினார்கள்.

சகோ. P.T. கிறிஸ்டோபர் ஆகஸ்டு 25 முதல் 31 வரை ஒரிஸாவிற்கு சென்று 1 லட்சம் கைப்பிரதிகள் அச்சடித்து, 2011 அக்டோபர் 26ல் விநியோகிக்க ICRM, OVGM ஊழியர்களோடு கலந்து ஆலோசித்தார்கள்.

2011 ஆகஸ்டு 31 அன்று **அகில இந்திய முழுஇரவு ஜெபஐக்கியம்** தலைவரின் மகன் **ஸ்டீபன்** TVGM நடுஇரவு ஜெபத்தில் கலந்து கொண்டு தேவசெய்தியளித்து, திருவிருந்து அளித்தார்கள்.

விசேஷமாக 2011 அக்டோபர் 14 - 16 வரை நடைபெறும் **கலிலேயா முகாமிற்காக** ஜெபியுங்கள் ! துதியுங்கள் ! பங்குபெறுங்கள் !

**தேவனுக்கே மகிமை !**

கிறிஸ்துவின் பணியில் ,
**ஸ்டீபன் கிறிஸ்டோபர்**

03.09.2011

# நித்திய கிருபையுடன் உனக்கு இரங்குவேன். ஏசாயா 54 : 8

வாக்குத்தத்த செய்தி : **சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபர்**

தேவவாக்குத்தத்திற்காக காத்திருக்கும் கர்த்தருடைய பிள்ளையே!

இந்த மாதம் தேவன் உங்களுக்கு கொடுக்கும் **வாக்குத்தத்தம் :**

**நித்திய கிருபையுடன் உனக்கு இரங்குவேன். ஏசாயா 54 : 8**

நாம் தினமும் தேவனுடைய கிருபைக்காகவும், இரக்கத்திற்காகவும் பிரயாசப்படுகிறோம். ஒரு வேளை நாம் பாவங்கள் செய்து தேவகிருபையை நம் வாழ்க்கையில் இழந்திருக்கலாம். எந்த சூழ்நிலையாக இருந்தாலும் சரி , தேவன் நம்மேல் மீண்டுமாக இரக்கம் பாராட்ட விரும்புகிறார்.

அவருடைய பிள்ளைகள் பாவம் செய்யும்போதும், வழி தவறி போகும்போதும் தேவன் வருத்தம் உள்ளவராக காணப்படுகிறார். அதே சமயம் அவர் இரக்கம் செய்கிறவராகவும் காணப்படுகிறார்.

நோவாவின் சம்பவத்தை வாசிக்கும்போது தேவன் மக்களின் பொல்லாங்குகளை பார்த்து, 40 நாட்கள் இரவும் பகலும் மழை பெய்ய செய்து அழித்ததாக பார்க்கிறோம்.

ஆனால் பின்பகுதியில் தேவனுடைய இரக்கத்தினால் நோவாவுடன் “**இனி மாம்சமானவைகள் எல்லாம் ஜலப்பிரளயத்தினால் சங்கரிக் கப்படுவதில்லை** என்றும், பூமியை அழிக்க இனி ஜலப்பிரளயம் உண்டாவதில்லை” என்றும் உடன்படிக்கை செய்தார் ( ஆதி. 9 : 11)

தேவன் அவருடைய பிள்ளைகளுக்கு எல்லா காலங்களிலும் இரக்கம் பாராட்டுகிறார். இதை தாவீது சங். 30 : 5ல் இவ்வாறாக கூறுகிறார்.

**“அவருடைய கோபம் ஒரு நிமிஷம், அவருடைய தயவோ நீடிய வாழ்வு.”**

நம்முடைய தேவன் இரக்கங்களின் தேவனாக இருக்கிறார். இதனை யாக்கோபு 5 : 11 ல் வாசிக்கலாம்.

**“கர்த்தர் மிகுந்த உருக்கமும் இரக்கமுள்ளவராயிருக்கிறாரே.”**

அது மட்டுல்ல சங். 145 :8ல் இப்படி வாசிக்கலாம்.

**“கர்த்தர் இரக்கமும் மனஉருக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர்.”**

சங். 116 :5 “கர்த்தர் கிருபையும் நீதியுமுள்ளவர், நம்முடைய தேவன் மன உருக்கமானவர்.”

அவர் நம்முடைய பாவங்களுக்கு தக்கதாக நமக்கு செய்யாமல் தயவு உள்ளவராக காணப் படுகிறார்.

தேவன் கிருபையும் இரக்கமும் உள்ளவராக இருக்கிறார் என்பதை அநேக வேதவசனங்கள் மூலமாக கண்டோம். ஆதலால் நம்முடைய வாழ்விலும் அதேவிதமான இரக்கத்தை பெறலாம். கவலைப் படாதிருங்கள்.

அவர் உங்கள் வாழ்வில் நித்திய அன்பையும், இரக்கத்தையும் வெளிப் படுத்துவார்.

நீங்கள் வேலைக்காக காத்துக் கொண்டிருப்பவராக இருக்கலாம் அல்லது பதவி உயர்வை எதிர்பார்த் திருக்கலாம் அல்லது குழந்தை பாக்கி யத்திற்காக காத்திருக்கலாம் அல்லது திருமண காரியத்திற்காக காத்திருக் கலாம். எந்த சூழ்நிலையாக இருந் தாலும் கர்த்தர் உங்கள் மனவிருப்பங் களை நிறைவேற்ற இரக்கமுள்ளவராக இருக்கிறார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

நாம் வேதத்தை வாசிக்கும் போது , அநேக தருணங்களில் இயேசு கிறிஸ்து இரக்கமுள்ளவராக காணப் படுகிறார். இயேசு யாருக்கெல்லாம் இரக்கம் பாராட்டினாரோ அவர்களுக் கெல்லாம் அற்புதங்கள் நடந்தது என பார்க்கலாம்.

இயேசு குஷ்டரோகியின் மீது இரக்கம் பாராட்டினதால் அவன் சுத்தமாகிறதை **மாற்கு 1 : 41,42** ல் காணலாம்.

“இயேசு மனதுருகி, கையை நீட்டி, அவனைத் தொட்டு ; எனக்கு சித்த முண்டு, சுத்தமாகு என்றார். இப்படி அவன் சொன்னவுடனே குஷ்டரோகம் அவனை விட்டு நீங்கிற்று, அவன் சுத்தமானான். ”

இயேசு உங்கள் மீது இரக்கம் கொண்டால் அவன் நிச்சயமாக உங்கள் வாழ்வில் அற்புதம் செய்வார். இதை புலம்பல் 3 : 22ல் வாசிக்கலாம்.

**“நாம் நிர்முலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே, அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை.”**

ஆகவே நம்முடைய வாழ்வில் அவர் நிச்சயமாக அற்புதம் செய்வார் என்ற நம்பிக்கையுடைவர்களாக இருக்கலாம். **தேவனுக்கே மகிமை!**

அநேக நேரங்களில் தேவனுக்கு நம் மேல் இரக்கமே இல்லை என்று நினைக்கலாம். நாம் பாவங்கள் செய்ததினால் அவருடைய இரக் கத்தைப் பெற்றுக்கொள்ள நமக்கு தகுதியில்லை என்று நினைக்கிறோம். லூக்கா 15ம் அதிகாரத்தில் தன் மகனுக்காக காத்திருந்த தகப்பனைப் போல தேவன் நாம் அவரிடம் எப்போது மனந்திரும்பி வருவோம் என்று காத்துக்கொண்டிருக்கிறார்.

**ஏசாயா 49 : 13** “சிறுமைப் பட்டிருக்கிற தம்முடையவர்கள்மேல் இரக்கமாயிருப்பார். ” என்று வாசிக்கிறோம்.

அதுமட்டுல்ல, **சங்.145 :9**ல் “கர்த்தர் எல்லார்மேலும் தயவுள்ளவர்; அவர் இரக்கங்கள் அவருடைய எல்லா கிரியைகளின் மேலுமுள்ளது” என்று வாசிக்கிறோம்.

ஆனால் தேவனுடைய இரக்கத் தையும் தயவையும் பெற்றுக்கொள்வ தற்கு நாம் என்ன செய்யவேண்டும் ?

***1. தேவனுக்கு பயந்திருக்க வேண்டும்***
***2. மனந்திரும்ப வேண்டும்***
***3. தேவனை விசுவாசிக்க வேண்டும்***
***4. மற்றவர்களுக்கு இரக்கம் பாராட்ட வேண்டும்***
***5. தேவனுடைய கட்டளைகளை கைக்கொள்ள வேண்டும்.***

**முதலாவது,** நாம் தேவனுக்கு பயப் படும்போது அவருடைய இரக்கத்தைப் பெற்றுக் கொள்ள தகுதியுள்ளவர் களாக மாறுகிறோம்.

**சங். 103 : 13** ல் “தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல, கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார்.” என்று வாசிக்கலாம்.

**இரண்டாவதாக,** நாம் பாவங்களிலிருந்து மனந்திரும்பி அவருடைய இரக்கத்திற்காகவும், தயவிற்காகவும் ஜெபிக்க வேண்டும். இப்படிப்பட்ட மனந்திரும்புதலை தாவீதின் வாழ்வில் நாம் காணலாம். பத்சேபாளிடத்தில் தாவீது பாவத்திற்குட்பட்ட பின்பு நாத்தான் தீர்க்கதரிசி அவனிடத்தில் வந்து, அவன் பாவத்தை உணர்த்திய போது, தாவீது மனந்திரும்பி இவ்வாறு கூறுகிறார். சங். 51 : 1 ,2

**“தேவனே உமது கிருபையின்படி எனக்கு இரங்கும், உமது மிகுந்த இரக் கங்களின்படி என் மீறுதல்கள் நீங்க என்னை சுத்திகரியும். என் அக்கிரமம் நீங்க என்னை முற்றிலும் கழுவி, என் பாவமற என்னை சுத்திகரியும் .”**

**மூன்றாவதாக ,** நாம் தேவனை விசுவாசிக்கும்போது அவர் நம்மேல் இரக்கமுள்ளவராக காணப்படுகிறார். அவரிடத்தில் வருகிற ஒவ்வொருவரையும் மிகுந்த இரக்கத்தோடு வரவேற்கிறார். இயேசுகிறிஸ்து அநேக சப்பாணிகளையும், குருடர்களையும், ஊமையர்களையும், ஊனர்களையும் சொஸ்தமாக்கினார் என்பதை **மத்.15:29 – 31**ல் பார்க்கலாம்.

இயேசுவைத் தேடி வந்த அனைவரிடத்திலும் மிகுந்த விசுவாசமும், நம்பிக்கையும் காணப்பட்டது என்பதை நாம் மறந்து விடக் கூடாது. இயேசு அவருடைய அளவற்ற இரக்கத் தினால் எல்லோரையும் சொஸ்தமாக்கினார்.

**நான்காவதாக,** நாம் நம்மைச் சுற்றிலும் இருப்பவர்களிடத்தில் இரக்கம் பாராட்டினால் தான் தேவன் நம்மிடம் இரக்கம் பாராட்டுவார்.

எபே. 4:32ல் ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள் என்று எழுதியிருக்கிறது.

**1பேதுரு 3 : 8** நீங்கள் எல்லாரும் ஒருமனப்பட்டவர்களும், இரக்கமுள்ளவர்களும், சகோதர சிநேகமுள்ளவர்களும், மனஉருக்கமுள்ளவர்களும், இணக்கமுள்ளவர்களாயிருந்து . . .

மற்றவர்கள் வேதனைப்படும் போது, அவர்களுக்கு இரங்கி உதவி செய்யும்போதுதான் தேவன் நமக்கு இரக்கம் பாராட்டுவார்.

**ஐந்தாவதாக,** தேவனுடைய கட்டளைகளை கைக்கொள்ள வேண்டும். **யாத். 21 :6** ‘‘என் கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கோ ஆயிரம் தலைமுறை மட்டும் இரக்கம் செய்கிறவராயிருக்கிறேன்.’’

**பக்தன் பாடுகிறார் :**

***மனதுருகும் தெய்வமே***
***இயேசையா***
***உம்மை மனதார துதிப்பேன்***
***ஸ்தோத்தரிப்பேன்.***
***உங்க இரக்கத்திற்கு முடிவே***
***இல்லை***
***உங்க அன்புக்கு அளவே இல்லை***

உங்கள் விசுவாசத்தை பின்வருமாறு மீண்டும் மீண்டும் அறிக்கையிடுங்கள்.

***என் தேவன் இரக்கங்களின்***
***தேவன்***
***அவர் என் மேல் இரங்குவார்***
***அவருடைய இரக்கம்***
***என் வாழ்வில்***
***எப்பொழுதும் காணப்படும்.***

தேவனுக்கே மகிமை.

## இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

**உன் ஊழியத்தை நிறைவேற்று.** 2 **தீமோ.** 4 : 5

தமிழகத்தில் அனைத்து கிராமங்களிலுமுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட **1 கோடி குடும்பங்களுக்கு** "**100 - கிராம ஊழியம்**" திட்டத்தின் மூலம் '**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**' இலவசமாக வழங்கி **இயேசுவை**அறிவித்தல்.

# தூத்துக்குடி மாவட்டம் - உடன்குடி யூனியன்

# 100 - கிராம ஊழியம்

**நோக்கம்:** 2011 **அக்டோபர் 10** திங்கள் காலை 9 மணி முதல் **அக்டோபர்** 14 வெள்ளி மதியம் 1 மணி முடிய **உடன்குடி யூனியன் கிராமப் பகுதிகளில்** "100 - TVGM கிராமங்களில்" 10,000 வீடுகளில் இயேசுவை அறிவித்து "**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**" இலவசமாக வழங்கி வாஞ்சையுள்ள ஆத்துமாக்களின் முகவரிகளை சேகரித்து பின்தொடர்பு பணி செய்து, அருகிலுள்ள சபைகளில் இணைத்து விடுதல் ஆகும்.

**உபவாச ஜெபம் :2011 அக்டோபர் 10** திங்கள் காலை **9 - 1** மணி

**கடைசி நாள் ஜெபம் : 2011 அக்டோபர் 14** வெள்ளி மதியம் **9 - 1** மணி

**தொடர்ந்து 14,15,16 கலிலேயா முகாமில் கலந்து கொள்ள வேண்டும்.**

### உபவாச ஜெபம் நடைபெறும் இடம்

**சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபர்,** TVGM
C/o. **இயேசுவின் கோட்டை ஏ.ஜி. சர்ச்**
**457, குழந்தை ஏசு நகர்,**
**குலசேகரப்பட்டிணம் - மணப்பாடு மெயின் ரோடு**
**குலசேகரப்பட்டிணம். தூத்துக்குடி மாவட்டம்.**
**செல்:** 98657 49723 , 97655 07193

உதவி செய்ய முன் வந்த **பாஸ்டர்** K.**ரவி** அவர்களுக்கு நன்றி!

**தகுதி** : ஆலயமில்லாத கிராமங்களில் **5** நாள் தங்கியிருந்து, சுவிசேஷம் அறிவித்து கிராமத்தில் சாப்பிட்டுக் கொண்டு ஊழியம் செய்ய, அர்ப்பணித்த **18** வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

**பிரயாணப்படி :** தமிழ்நாட்டிலிருந்து ரூ. **5** செலுத்தி, அனுமதி தபால் பெற்று வருபவர்களுக்கு போக, வர குறைந்த பஸ் கட்டணமும், உணவும் வழங்கப்படும். வேறு உதவித்தொகையோ, அன்பளிப்போ கிடையாது.

**முக்கிய அறிவிப்பு :** **1.** இது ஒரு கௌரவ, தியாக சேவையாகும்.

**எக்காரணத்தை முன்னிட்டும் நஷ்ட ஈடு வழங்கப்படமாட்டாது.**

2. இயேசு கிறிஸ்துவின் கடைசி கட்டளையை நிறைவேற்ற ஆத்தும தரிசனம் பெற்றவர்கள் மட்டும் 100 - கிராம ஊழியத்திற்கு வாருங்கள்.

**சகல தொடர்புகளுக்கும் :** சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர்,
**100 - கிராமம்,** திருச்சி - 620 102. **Ph : 0 - 431 - 2607241 , 94449 00445**

# சேலம் மாவட்டம் - கொளத்தூர் யூனியன்
# 100-கிராம ஊழிய அறிக்கை

. . . . . சகோ. பன்னீர் செல்வம்

ஊழியம் நடைபெற்ற தேதி : **15. 08. 2011 முதல் 19. 08. 2011 வரை**
முதல்நாள் கூடுமிடம், உணவு, இனிப்பு பார்சல் செலவுகளை பொறுப்பெடுத்து உதவியவர் : **பாஸ்டர் பால்விக்டர்,** CFW **சபை, குரும்பனூர்**

| | | |
|---|---|---|
| முதல் நாள் **தேவசெய்தி** கொடுத்தவர் | : | **பாஸ்டர் பால்விக்டர்** |
| ஊழியம் செய்த **கிராம ஊழியர்கள்** | : | 50 |
| பிரிக்கப்பட்ட **குழுக்களின்** எண்ணிக்கை | : | 12 |
| வழங்கப்பட்ட **யோவான் சுவிசேஷங்கள்** | : | 11,546 |
| **இயேசுவே இரட்சகர்** கைப்பிரதிகள் | : | 10,000 |
| மற்ற கைப்பிரதிகள் | : | 5000 |
| '**நம் மத்தியில் வாழ்ந்த அவர்**' புத்தகங்கள் | : | 400 |
| **சிலுவைக்கொடிகள்** | : | 10,000 |
| புறமதநண்பர்களின் **விலாசங்கள்** | : | 210 |

**சகோ. P.T. கிறிஸ்டோபர்** அவர்கள் முதல் நாள் ஜெபத்திலும், **சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபர்** அவர்கள் கடைசிநாள் ஜெபத்திலும் கலந்து கொண்டு ஊழியர்களை உற்சாகப்படுத்தி ஜெபித்தார்கள். கடைசிநாளில் கிராம ஊழியர்கள் கூடி, கிராமங்களில் கர்த்தர் தங்களை எப்படியாக வழிநடத்தினார் என்பதை சாட்சியாக கூறி தேவனை மகிமைப்படுத்தினார்கள்.







# கிராம ஊழியர்களின் அனுபவ சாட்சிகள்

**குழு 1 - சகோதரிகள்: மணியம்மாள், தேவகிருபை, ரெபேக்கா லட்சுமி, ஜெயந்தி சாமுவேல்.**

நாங்கள் 12 கிராமங்களில் வீடு வீடாக இலவசமாக யோவான் சுவிசேஷம் கொடுத்து **இயேசுவே கர்த்தர்** என்று அறிவித்தோம். மக்கள் வாஞ்சையோடு கேட்டார்கள். வியாதியஸ்தர்களுக்காக ஜெபித்தோம். மொத்தம் 1100 யோவான் சுவிசேஷங்கள், 830 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 2 - சகோதரிகள் : ஜோதிமணி, அபியேல் அந்தோணியம்மா, கிளமெண்ட்ஸ்மேரி, தெபோராள்.**

**ஆலமரத்துப்பட்டி** ஊராட்சியிலுள்ள **ஜோகினூர்** கிராமத்தில் ஊழியம் செய்த போது, சிலர் எங்களை மதமாற்றம் செய்ய வந்தீர்களா ? என்றார்கள். அப்போது எதிர் வீட்டிலிருந்தவர்கள் எங்களுக்காக பரிந்து பேசினார்கள். பின்பு அக்கிராமத்திலுள்ள அனைத்து வீடுகளிலும் சுவிசேஷப் புத்தகம் கொடுத்தோம். மொத்தம் 1000 யோவான் சுவிசேஷங்கள், 850 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 3 -சகோதரிகள் : ஷீலா,சாராள், அந்தோணிமேரி, ரோணிக்கம், எஸ்தர் கனகாம்புஜம்.**

**குரும்பனூர்** கிராமத்தை சுற்றியுள்ள இடங்களில் யோவான் சுவிசேஷம் கொடுத்தோம். அநேகர் ஏற்றுக் கொண்டார்கள். சிலர் வேண்டாம் என்றார்கள். சகோதரர் மூர்த்தி என்பவரையும், அவரது மனைவியையும் சந்தித்து இயேசுவைப் பற்றி கூறி ஜெபித்தோம். உடனே அவர்கள் இயேசுவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார்கள். மொத்தம் 1000 யோவான் சுவிசேஷங்கள், 800 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 4 - சகோதரிகள்: ரூபி ஜெயந்தி, அன்பு ராஜாத்தி, சௌந்திரமேரி, கிருபா பழனியம்மாள்.**

நாங்கள் சென்ற கிராமத்தில் **பூங்கொடி** என்ற குறிசொல்லும் பெண் எங்களை கண்டவுடன், வரவேற்று சுவிசேஷத்தை ஆர்வமாக கேட்டார்கள். எங்களை அன்போடு உபசரித்தார்கள். இயேசுவை நம்புவதாக கூறினார்கள். நாங்கள் ஜெபித்து கடந்து வந்தோம். ஒரு கோவில் பூசாரிக்கு யோவான் புத்தகம் கொடுத்தபோது அதை கும்பிட்டு வாங்கி, உடனே பயபக்தியுடன் வாசித்தார். ஒரு குடிசையில் வயதான ஒருவர் மிகவும் சுகவீனமாய் படுத்திருந்தார். நாங்கள் அவரைப் பார்த்து இயேசு உங்களை நேசிக்கிறார் என்று சொல்லி ஜெபித்தோம். அடுத்த நாள் அவருடைய குடிசையின் வழியாக சென்றபோது அவர் அங்கு இல்லை. பக்கத்து வீட்டில் விசாரித்தபோது அவர் நன்றாக சுகமாகி வெளியில் போயிருக்கிறார் என்றார்கள். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு அந்த வயதானவருக்கு சுகம் கொடுத்தார். மொத்தம் 550 யோவான் சுவிசேஷங்கள், 500 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 5 - சகோதரர்கள் : செல்வராஜ், ஜோசப் முரளிதரன், அந்தோணி, ஜான் அழகப்பன்.**

நாங்கள் 11 கிராமங்களில் ஊழியம் செய்தோம். பில்லிசூன்யத்தால் பாதிக்கப்பட்டவர்கள், கர்ப்பப்பையில் கேன்சர் உள்ளவர்கள், பிரிந்த குடும்பங்கள், வியாதியஸ்தர்களுக்காக ஜெபித்தோம். நாங்கள் போன இடங்களில் மாணவ, மாணவிகள் தங்கள் படிப்பிற்காக ஜெபிக்கக் கேட்டார்கள். ஜெபித்தோம். மொத்தம் 550 யோவான் சுவிசேஷங்கள், 500 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 6 - சகோதரிகள் : மரியம்மாள், பாக்கியம், சலோமி சம்மனசு, அன்னாள்.**

நாங்கள் போன கிராமங்களில் யாவரும் சுவிசேஷப் புத்தகங்களை அன்புடன் வாங்கிக் கொண்டார்கள். ஊழியத்தின் கடைசி நாளன்று இரண்டு பேர் நாங்கள் தங்கியிருந்த இடத்திற்கு வந்து யார் இந்த புத்தகங்களை கொடுக்க சொல்லியது ? என்றார்கள். நாங்கள் இயேசுகிறிஸ்துவே கர்த்தர் என கூற வந்தோம் என்று சொன்னோம். உடனே நாங்கள் கொடுத்த புத்தகத்தை வீசி விட்டு போய் விட்டார்கள். மொத்தம் 950 யோவான் சுவிசேஷங்கள், 900 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 7 - சகோதரர்கள் : மகாராஜன், மாற்கு மாரியப்பன், ஜெயக்குமார், பாபு சாலமோன்.**

**குரும்பபாளையம்,முனியனூர், ரெட்டிபாளையம், கணபதிநகர்** ஆகிய கிராமங்களில் மக்கள் ஆர்வமுடன் சுவிசேஷத்தைக் கேட்டார்கள். வியாதி யஸ்தர்களுக்காக ஜெபித்தோம். மொத்தம் 1000 யோவான் சுவிசேஷங்கள், 850 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 8 - சகோதரர்கள் : இஸ்ரவேல், செல்வராஜ், ஏசுராஜா, ஸ்டீபன்.**

**குறிச்சி** ஊராட்சியிலுள்ள 11 கிராமங்களில் யோவான் புத்தகம் கொடுத்தோம். 2 வாலிபர்கள் மதமாற்றம் செய்ய வந்தீர்களா என்று கோபமாக கேட்டார்கள். அவர்களிடம் அமைதியாக விளக்கம் சொல்லிவிட்டு அடுத்த பகுதிக்கு சென்றோம். மொத்தம் 1000 யோவான் சுவிசேஷங்கள், 850 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 9 - சகோதரர்கள் : யோசுவா, ஜெபமலைநாதன், ஆபிரகாம், பீட்டர், ஜீவானந்தம்.**

நாங்கள் சென்ற கிராமங்களில் மக்கள் மகிழ்ச்சியோடு சுவிசேஷப் புத்தகத்தை வாங்கினார்கள். அநேகர் தங்களுடைய பிரச்சனைகளுக்காக ஜெபிக்கச் சொன்னார்கள். ஜெபித்தோம். மொத்தம் 1000 யோவான் சுவிசேஷங்கள், 800 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 10 - சகோதரர்கள் : பால்ராஜ், சூசைமாணிக்கம், தாஹாகனி, ஸ்டான்லி.**

கிராமத்தில் அநேக வீடுகளில் எங்களை ஜெபிக்கச் சொன்னார்கள். ஒரு இளம் வாலிபனுக்கு ஜெபித்தபோது கர்த்தர் உடனே விடுதலைக் கொடுத்தார். சிங்கம்பேட்டையில் ஒரு சகோதரன் இங்கு கிறிஸ்தவ புத்தகங்கள் எதுவும் கொடுக்கக் கூடாது என்றார். மொத்தம் 1000 யோவான் சுவிசேஷங்கள், 800 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 11 -சகோதரிகள் : பிச்சையம்மாள், எஸ்தர் சாலமான், செல்லக்கனி, எஸ்தர் எபிநேசர்.**

எங்களுக்கு எதிர்ப்புகள் இல்லை. சிலர் மட்டும் புத்தகம் வேண்டாம் என்றனர். மொத்தம் 920 யோவான் சுவிசேஷங்கள், 820 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 12 -சகோதரிகள் : கஸ்தூரி, மேரிமீனா, மரியாள், அன்னாள்.**

நாங்கள் சென்ற கிராமத்தில் பீடி குடித்துக் கொண்டிருந்த ஒருவரிடம் சுவிசேஷம் சொல்லி, இயேசுவை ஏற்றுக் கொள்ளுங்கள் என்றதும், அவர் சரி என்று மரத்தில் ஏறி எங்களுக்கு பழம் பறித்துக் கொடுத்தார். மொத்தம் 1026 யோவான் சுவிசேஷங்கள், 1000 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

***தேவனுக்கே மகிமை !***

## சேலம் – கொளத்தூர் 100 – கிராம ஊழியத்தின்போது சந்திக்கப்பட்டவர் எழுதிக் கொடுத்த சாட்சி !

நான் **இந்து**க் குடும்பத்தைச் சேர்ந்தவன். நான் கொளத்தூர் ஒன்றியம் **குரும்பனூரில்** இருந்தேன். அப்பொழுது 100–கிராம ஊழியர்கள் எங்கள் பகுதிக்கு ஊழியத்திற்கு வந்தார்கள். அப்பொழுது **அந்தோணிம்மா, ரோணிக்கம்** என்ற ஊழியர்கள் எங்களுக்கு இயேசுவைப் பற்றி சொல்லி, இயேசுவை ஏற்றுக் கொள்ள உதவி செய்தார்கள். நானும் என் மனைவியும் 100 – கிராம ஊழியத்தின் மூலம் **இயேசுவை ஏற்றுக் கொண்டு, குரும்பனூர் – பாஸ்டர் பால்விக்டர்** மூலம் **ஞானஸ்நானம்** பெற்றுக் கொண்டோம். கர்த்தர் தாமே எங்களை ஆசீர்வதிக்கும் படி 100–கிராம ஊழியர்கள் ஜெபிக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**மூர்த்தி ( எ ) யூதா,**
**புவனா ( எ ) மார்கிரேட்**

## 2011 அக்டோபர் மாத இயேசுவை விரும்புவோர் முகாம்

மாவட்டம் : கன்னியாகுமரி
யூனியன் : முஞ்சிறை
நாள் : 22.10.2011
நேரம் : காலை 9 மணி

**கூடுமிடம்**

**பாஸ்டர் D. வில்சன்**
**ஏ.ஜி. சர்ச்**
**கிராத்தூர் - 629 181**
**கொல்லங்கோடு வழி**
**கன்னியாகுமரி மாவட்டம்**
**செல் :** 94867 56385(Pr. வில்சன்)
98658 26424(Sis.ஷோபனா)

## கன்னியாகுமரி மாவட்ட TVGM அறிமுகப்பணி அலுவலகம் 2011 ஆகஸ்ட் ஊழிய அறிக்கை

கர்த்தருடைய கிருபையினால் 2011 ஆகஸ்ட் மாத ஊழியங்கள் ஆசீர்வாதமாக நடைபெற்றன.

அறிமுகப்பணி மூலம் புதிதாக சந்தித்த குடும்பத்தினர் மிகவும் அன்பாக எங்களை ஏற்றுக் கொண்டு தங்கள் முழு ஒத்துழைப்பையும் கொடுக்கின்றனர். தேவனுக்கே மகிமை !

மேலும் சுவிசேஷப் பணி செய்யும் தாய்மாரையும் கர்த்தர் பெலப்படுத்தி, **சுபாஷ்நகர்** பகுதியில் ஏராளமான புறமத நண்பர்களை சந்தித்து சுவிசேஷ ஊழியம் செய்ய கிருபை செய்தார்.

புதிய சபைகளில் அறிமுகப் பணி செய்ய தொடர்ந்து ஜெபித்து முயற்சி செய்து வருகிறோம். கர்த்தர் ஏற்ற வேளையில் வழியை திறப்பார் என விசுவாசிக்கிறோம். தேவனுக்கே மகிமை!

கிறிஸ்துவின் பணியில்,
**N.ஷோபனா இவாஞ்சலின்**
செல்: **98658 26424**
**5 / 3A** கிரவுண் தெரு,
வாத்தியார் விளை,
நாகர்கோவில் – 629 001
போன் : 04652 - 277251

**குறிப்பு** : அறிமுகப்பணிக்கு அர்ப்பணித்த சகோதரிகள் மேற்கண்ட முகவரியுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**TVGM தலைமை அலுவலகம்**

போன் : 0431 - 2607241
செல் : 94449 80445
94435 44628
Email : 100village@tvgm.org
Web : www.tvgm.org

உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும். யோவான் 16:20

# கலிலேயா முகாம் 2011

## ( மகிழ்ச்சியான நாட்கள் )

நாள் : **2011 அக்டோபர் 7,8,9** வெள்ளி,சனி,ஞாயிறு

இடம் : **கோடாவிளை பஸ் ஸ்டாப்**

( உவரிக்கும் கூடன்குளத்திற்கும் மத்தியில் )

நேரம் : **தினமும் மாலை 6.30 மணிக்கு**

(100 கிராம ஊழியர் சாட்சிகள் சனிக்கிழமை காலை **10 – 1** )

**தேவ செய்தியாளர்:**

## சுவிசேஷகர். நெல்லைக்குமார்

( IYFC – மெஞ்ஞானபுரம் )

**ஜெபியுங்கள் !** **பங்கு பெறுங்கள் !**

| | |
|---|---|
| **முகாம் ஒருங்கிணைப்பாளர்**<br>**திரு. இரத்தினம் ஆசிரியர்,**<br>தொலைபேசி : 04637-276306 | **கிறிஸ்துவின் பணியில்,**<br>**சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபர்** C.E.O<br>**தமிழ் வில்லேஜ் காஸ்பல் மிஷன்,**<br>**100 கிராமம், திருச்சி – 620 102.**<br>Bro.Stephen H/P : **94449 80445** |
| **திரு. மனோகர் ஆசிரியர்,**<br>தொலைபேசி :04637-272664<br>மொபைல் : 94864 81522 | **ஸ்தாபகர்**<br>Bro.P.T. **கிறிஸ்டோபர் - 94435 44628** |
| சிறுவர் இல்லம் : 04637- 276309 | |

**பஸ்ரூட்**

1. திருநெல்வேலி மாவட்டம் திசையன்விளையிலிருந்து கோடாவிளை பஸ் ஸ்டாப் வருவதற்கு அநேக மினி பஸ் உண்டு.
2. நாகர்கோவிலிருந்து கூடன்குளம், ஆத்தங்கரை பள்ளிவாசல், நவலடி **கோடாவிளை பஸ்டாப்** வழியாக உவரி, திருச்செந்தூர், தூத்துக்குடி போகும் பஸ்ஸில் ஏறி வரலாம்.

**குறிப்பு : 1. டி.வி.ஜி.எம்** கிராம ஊழியங்களுக்காக உண்டியல், ரசீது புத்தம் வாங்கியிருப்பவர்கள் முகாமிற்கு தவறாமல் கொண்டு வாருங்கள்.

2. **கலிலேயா முகாமில்** 3 நாட்கள் தங்கியிருக்க அனுமதி உண்டு

3. **தனித்தனியாகவும், குடும்பத்திற்காகவும் ஊழியர் ஜெபிப்பார்கள்.**

## TVGM தலைமை அலுவலகம்



TVGM தலைமை அலுவலகம் – சோமரசம் பேட்டையில் 26 பேர் ( ஆண், பெண்) சேவை செய்து வருகிறார்கள்.

இவர்களுக்கு 2011 ஆகஸ்டு மாதம் வழங்கப்பட்ட மொத்த உதவித்தொகை ரூ.**91,115** ஆகும். சராசரியாக ஒரு நபருக்கு மாதம் ரூ. 3500 ஆகிறது. புதிதாக இணைந்து சேவை செய்பர்களுக்கு குறைவாகவும், பல வருடங் களாக சேவை செய்பவர்களுக்கு அதற்கு ஏற்றாற்போலவும் வழங்கப்படுகிறது.

கர்த்தருடைய பிள்ளைகள் அனுப்பும் சிறுசிறு காணிக்கை பணத்திலிருந்தே இந்த உதவித்தொகை இதுவரையிலும் வழங்கப்பட்டு வருகிறது. ஆதலால் உதவித்தொகைகளை கூட்டி வழங்குவதற்கு முடியாமல் தவிக்கிறோம். விலைவாசிகள் விஷம் போல் ஏறி செல்கிறது.

பின்வரும் நாட்களில் ஊழியர்களுடைய உதவித்தொகைகளை கூட்டி வழங்குவதற்கு உங்களுடைய ஜெபமும், உதாரத்துவமான காணிக்கையும் தேவைப் படுகிறது. ஒரு ஊழியரை ஒரு வருடத்திற்கு பொருளுதவியினால் தாங்குவதற்கு முன்வருவீர்களானால் எங்களுக்கு பெரும் உதவியாக இருக்கும்.

**ஒரு ஊழியருக்கு ஒரு மாதத்திற்கு சராசரி தேவை ரூ. 3500 /–**

**குறைந்த பட்சம் ஒரு மாதமாவது தாங்குவதற்கு முன்வருவீர்களா?**

## TVGM சிறுவர் இல்லம் - திருச்சி



TVGM ஏலீம் சிறுவர் இல்லத்தில் 50 பேர் கல்வி பயின்று வந்தார்கள். உணவு, உடை , உறைவிடம், கல்வி, மருத்துவம் யாவும் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

கர்த்தருடைய கிருபையினால் 22 சிறுவர் களுக்கு மாதம் ரூ. 1000/- வீதம் 22 கர்த்த ருடைய பிள்ளைகள் பல இடங்களிலிருந்து பொருளுதவியினால் தாங்கி வருகிறார்கள். ஆனால் **28 சிறுவர், சிறுமிகளுக்கு** உதவி செய்ய இதுவரையிலும் யாரும் முன் வரவில்லை. அவ்வப் போது கர்த்தருடைய பிள்ளைகள் பிறந்தநாள், திருமண நாளில் கொடுக்கும் பொது காணிக்கையை வைத்தே சமாளித்து வருகிறோம்.

ஆதலால் சிறு பிள்ளைகளின் வருங்காலத் தேவைக்கு படிப்புக்கு எந்தவித சேமிப்பும் நம்மிடத்தில் இல்லை. ஒருவேளை **28 பிள்ளைகளுக்கும்** பொருளுதவி யினால் தாங்க கர்த்தருடைய பிள்ளைகள் முன் வந்தால் மிக சிறப்பாக இருக்கும்.

**ஒரு பிள்ளைக்கு ஒரு மாதத்திற்கு சராசரியாக ரூ. 1000/– தேவை**

**நீங்கள் ஒரு வருடத்திற்காவது தாங்குவதற்கு முன்வரலாமே?**

# ஓரிஸாவை நேசியுங்கள் ! ஓரிஸாவிற்காக ஜெபியுங்கள் !

## 1 லட்சம் பேருக்கு கைப்பிரதிகள் (தேவை ரூ. 1 லட்சம்)

**Bro. P.T. கிறிஸ்டோபர்** – ஸ்தாபகர்

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!

கர்த்தருடைய பெரிதான கிருபையினாலும் , உங்கள் ஜெபத்தினாலும் 2011 ஆகஸ்டு 25 முதல் 31 முடிய ஒரு வாரம் ஓரிஸா மாநிலம் **பவானி பட்னா**விற்கு சென்று வர கர்த்தர் உதவி செய்தார். **சகோ. எட்வின் , சகோ. கென்னடி** ICRM அவர்கள் பேருதவியாக இருந்தார்கள். தேவனுக்கே மகிமை!

முதலாவது **நர்லா ரோடு** பக்கத்திலுள்ள கிராமத்திற்கு சென்றோம். கர்த்தருக்குச் சித்தமானால் 10 சென்ட் நிலம் **ரூ. 50,000/-**த்திற்குள் வாங்கி ஜெபவீடு அமைக்கவும், மற்றொரு நிலம் ரூ. 2,00,000 (2 லட்சம்) த்தில் வாங்கி சிறுவர் இல்லம் போன்ற சமூக சேவை மையம் அமைக்கவும் திட்டமிட கர்த்தர் கிருபை செய்தார்.



ஞாயிற்றுக் கிழமை மூன்று ICRM சபைகளில் தேவசெய்தி கொடுக்க **சகோ.ஜான் கென்னடி** ஒழுங்கு செய்து தந்தார்கள்.





சனிக்கிழமை மாலையில் பிரிண்டிங் பிரஸ்க்கு சென்று 1 லட்சம் சுவிசேஷக் கைப்பிரதிகள் ஒரியா மொழியில் அச்சடிப்பதற்கு ஏற்படும் செலவுகளை விசாரிக்க கர்த்தர் உதவிச் செய்தார். திங்கட்கிழமை ICRM மூலம் மிஷனெரி பணி செய்யும் அனைத்து ஊழியர்களையும், OVGM மேனேஜிங் டிரஸ்டி **சகோ. சுரேந்திரக்குமார் நாயக் , TVGM பாஸ்டர் பர்தார், பாஸ்டர் பனி , சகோ.ஜாய்குட்டி** அவர்களையும் ஜுனாகர் பட்டணத்தில் கூடி வர **சகோ. எட்வின்** உதவி செய்தார்கள். **சகோ. திவாகர்** சபை போதகராக உள்ளார். காலை 10 மணி முதல் 1 மணி வரை தேவசெய்தியும் , 1 லட்சம் கைப்பிரதிகளை விநியோகிக்கும் திட்டமும் ஆலோசிக்கப்பட்டது. கர்த்தருக்குச் சித்தமானால் 2011 அக்டோபர் 26ம் தேதி ஊழியர்கள் கூடி ஜெபித்து, இந்தத் திட்டத்தை 100 சந்தைவெளிகளில் செயல்படுத்தவும், மேலும் OVGM மூலம் 100 சென்டர்கள் அமைத்து அனைத்து கைப்பிரதிகளையும் கிராமங்கள் தோறும் விநியோகிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.





**சகோ. அருள்** மூலம் ஆத்தும ஆதாயம் செய்யப்பட்ட 10 பேரையும், மற்றும் **சகோ. கென்னடி** மூலம் கர்த்தருக்குள் வழிநடத்தப்பட்ட 2 பேரையும் தேவனோடு உடன்படிக்கை செய்யும் நிகழ்ச்சியை நடத்துவதற்கு தேவன் கிருபை அளித்தார்.



கூட்டம் முடிந்தபின்பு **பவானி பட்னாவில்** ஊருக்கு வெளியே **பாஸ்டர் பனீ** அவர்கள் வாங்கியிருக்கும் நிலத்தை இரவில் மழையோடு சென்று பார்வையிட்டு, ஜெபிக்கவும் கர்த்தர் கிருபை செய்தார்.

**Orissa Village Gospel Mission** மேனேஜிங் டிரஸ்டி **சகோ. சுரேந்திரக்குமார்** அவர்கள் **M. ராம்பூர்** பகுதியில் ஒரு ஜெபவீடு கட்டித் தர கேட்டுக் கொண்டார்கள். நிலம் ஆயத்தமாக இருப்பதாக கூறினார்கள். ஆனால் நேரடியாக பார்வையிட முடியவில்லை.

TVGM மூலம் **கந்தமால்** மாவட்டத்தில் **பாஸ்டர் பர்தார்** அவர்களுக்கு **குருத்தன்கோடு** கிராமத்தில் கட்டிக் கொடுத்த ஜெபவீட்டிற்கும், அவர்கள் நடத்தி வரும் சிறுவர் இல்லத்திற்கும் மின்சாரம் அமைக்க ரூ. 15,000 கேட்டிருந்தார்கள். மின்சாரம் மிக அத்தியாவசியம் என்பதை உணருகிறேன். ஜெபியுங்கள்.

## SRI LANKA VILLAGE GOSPEL MISSION (SLVGM)

**124 / 3, Nursing Home Road, Hatton , Sri Lanka. 0094512222489**

SLVGM , மாரநாதா சிறுவர் இல்ல ஊழியங்களுக்கும் பொருளுதவியினால் தாங்க விரும்புகிறவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய விபரம் :

| **Maranatha Children Home** | **Sri Lanka Village Gospel Mission** |
|---|---|
| A/C No. 186100107516451 (General purpose) (Savings) | A/C No. 015020242136 |
| A/C No. 186100297516451 (Educational purpose)(Current) | A/C No. 015010013698 |
| People's Bank, Hatton | Hatton National Bank, Hatton |

**Bro. P.T. Christopher** SLVGM (Founder/Patron) 0091 94435 44628

**Email :** jesus100villages@yahoo.com **Web :** www.tvgm.org

# இயேசுகிறிஸ்துவே கர்த்தர்

## துதி, கனம், மகிமை – இயேசுகிறிஸ்துவுக்கே!

**பூமியின் கடைசி பரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்.**

## விசுவாசிகள் எழுதிய சாட்சிகளின் சில வரிகள்

**சகோ. S.N. ராஜா, லண்டன்,**

கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு என் உறவினர்கள் மதுபானத்துக்கு அடிமையாக இருந்தார்கள். அதிலிருந்து விடுதலையாக ஜெபிக்கும்படி கேட்டிருந்தேன். நீங்களும் ஜெபித்து **"கர்த்தர் மேல் பாரத்தை வைத்து விடு "** என்று பதில் எழுதியிருந்தீர்கள். நானும் 100–கிராம ஊழியத்திற்கு சாட்சி எழுதுவதாக பொருத்தனை செய்து ஜெபித்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு மதுபானத்திலிருந்து விடுதலைக் கொடுத்தார்.

**சகோதரி நகோமி.**

என் கணவரின் மனமாற்றத்திற்காக ஜெபிக்க கடிதம் எழுதியிருந்தேன். நீங்களும் ஜெபித்து ஆறுதலான பதில் எழுதியிருந்தீர்கள். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு என் கணவரை மனம் மாற செய்தார். நாங்கள் குடும்பமாக மகிழ்ச்சியோடு வாழ்ந்து வருகிறோம்.

**சகோதரி ரெஜி பிரியா, க. குமரி.**

ஏப்ரல் மாதம் வாக்குத்தத்தம் **"பயப்படாதே, நான் உனக்கு துணை நிற்கிறேன் "** என்ற வசனத்தின்படி 04.04.11 அன்று எனக்கு சுகபிரசவத்தில் ஆண்குழந்தை பிறந்தது. மேலும் என் சகோதரிக்கு திருமணம் நடந்தது. கர்த்தர் துணையாக இருந்து உதவி செய்தார். தேவனுக்கே மகிமை !

**சகோதரி ஜெஸி, சென்னை.**

என் இளைய மகன் 1 வயதில் உடல் நலம் சரியில்லாமல் இருந்தான். அப்பொழுது கர்த்தரிடத்தில் அவனுக்கு நல்ல சுகத்தையும், ஞானத்தையும், திறமையையும் கொடுத்தால் 100–கிராம ஊழியத்திற்கு சாட்சி எழுதுவதாக ஜெபித்தேன். இப்பொழுது அவன் திறமையுள்ளவனாக +2 படித்து கொண்டிருக்கிறான். தேவனுக்கே மகிமை !

## புறமத நண்பர்கள் எழுதிய சாட்சிகளின் சில வரிகள்

**சகோதரி விஜயலட்சுமி, புதுகை**

நான் சோர்ந்துபோய் இருந்த வேளையில் நீங்கள் அனுப்பிய வேத பாடங்களில் உள்ள வசனம் என்னை தெளிவுபடவும், பயந்தபோது பயத்தை அகற்றி மன தைரியத்தையும் கொடுத்தது. இப்பொழுது எதுவாகிலும் இயேசப்பாவிடம் மனம் திறந்து பேசுகிறேன். தேவனுக்கே மகிமை !

**சகோதரி நாச்சியம்மை, சிவகங்கை**

நீங்கள் அனுப்பும் வேதபாடங்கள் மூலம் எனக்கு புதிய தெம்பும், மன ஆறுதலும் கிடைக்கிறது. தொடர்ந்து பிரதிகள் அனுப்புங்கள்.

**சகோதரி பாப்பா, கன்னியாகுமரி**

2011 ஜுன் மாத பத்திரிகையில் **"நான் உன்னைப் பலப்படுத்தி உனக்கு சகாயம் பண்ணுவேன்"** என்ற வசனத்தின் அடிப்படையில் கர்த்தரிடத்தில் பெலப்பட என்ன செய்ய வேண்டுமென எழுதியிருந்த 5 கருத்துகளும் மிகவும் பிரயோஜனமாக இருந்தது.

**சகோதரி கலையரசி, திருவள்ளூர்**

2011 பிப்ரவரி மாத தமிழ்கிராமங்களுக்கு சுவிசேஷம் பத்திரிகையில் வெளிவந்த ஒவ்வொரு வசனங்களும், கருத்துகளும் என் வாழ்க்கையில் நம்பிக்கையையும், உற்சாகத்தையும் அளிப்பதாக இருந்தது.

**தினமும் ஒரு நிமிடமாவது ஜெபிப்பீர்களா?**

**"இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்". 1தெச.** 5:17

# தினசரி ஜெபக்குறிப்புகள்

**வாசிக்கும்போதெல்லாம் தேவனை ஸ்தோத்தரியுங்கள் !**

**திங்கள்:** 2011 அக்டோபர் 10 முதல் 14 வரை தூத்துக்குடி – உடன்குடி யூனியன் 100–கிராம ஊழியத்தில் கர்த்தருடைய பாதுகாவலுக்காகவும், சிறந்த அறுவடைக்காகவும், மேலும் 2011 அக்டோபர் 14, 15,16 தேதிகளில் கோடாவிளையில் நடைபெறும் **கலிலேயா முகாமிற்காகவும்** ஜெபியுங்கள். தேவனைத் துதியுங்கள்.

**செவ்வாய்:** 2011 அக்டோபர் 26 தீபாவளி வாரத்தில் ஒரிஸா மாநிலத்தில் நடைபெறும் 1 லட்சம் கைப்பிரதி விநியோக ஊழியத்தில் கர்த்தருடைய கரம் ஊழியர்களோடு இருக்கவும், சுவிசேஷ எழுப்புதல் காணப்படும்படியாகவும், நல்ல கால சூழ்நிலைக்காகவும், எதிர்ப்புகளின் சக்திகள் ஒன்றுமில்லாமல் போகவும், இத்திட்டத்திற்கு தேவைப்படும் பொரு ளாதாரத்தை பரத்திலிருந்து கர்த்தர் கிருபையாக கட்டளையிடும்படி ஜெபியுங்கள்.

**புதன் :** ஒரிஸாவில் **பவானி பட்னா** விலும், **நர்லா ரோடு** கிராமத்திலும், M. ராம்பூரிலும் மூன்று ஜெபவீடுகள் இந்த ஆண்டிலேயே கர்த்தர் கிருபையாக கட்டி முடிக்க நல்ல கால சூழ்நிலையையும், பொருளாதார வாசலையும் கிருபையாக கட்டளையிட ஜெபியுங்கள்.

**வியாழன் :** இலங்கை SLVGM மூலம் நடைபெறும் 100–கிராம ஊழியத்திற்காகவும், தன்னார்வத் தொண்டர்களுக்காகவும், Hattonல் நடைபெறும் மாரநாதா சிறுவர் இல்லத் திற்காகவும், அவர்களுக்கு தேவைப் படும் 4 சக்கர வாகனத்திற்காகவும், காரியதரிசி Rev. **ஜான் ஐசாயா,** சகோதரி **டப்னி ஐசாயா** குடும்பத்திற் காகவும் ஜெபியுங்கள்.

**மகன் ஜாஷ்வா ஐசாயா** அவர்களின் வேதாகம படிப்பு முடிவடைந்து தொடர்ந்து SLVGM ஊழியத்தை முழு பொறுப்பேற்று நடத்த தேவன் புதிய கிருபைகளை அளிக்கும்படியாக ஜெபியுங்கள்.

**வெள்ளி :** திருச்சி – சூறாவளிப்பட்டி கிராமத்தில் ஒரு ஜெபவீடு இந்த ஆண்டின் இறுதிக்குள் கட்டப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட ஜெபியுங்கள்.

திருச்சி – காந்தி கிராமத்தில் பார்வைற்றோர் மக்கள் மத்தியில் புதிய ஊழியம் ஆரம்பிக்கப்படவும், நிலம் வாங்கப்பட்டு அவர்களுக்கு ஒரு ஜெப வீடு கட்டப்படவும் ஜெபியுங்கள்.

**சனி :** TVGM / TASOL வரவு, செலவு கணக்குகள் தணிக்கை செய்யப்பட ஜெபியுங்கள்.

**ஞாயிறு :** ஊழியத்தில் பரிசுத்தம், அர்ப்பணிப்பு காணப்பட ஜெபியுங்கள்.

உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில்
தேவன் பிரியமாயிருக்கிறார். 2 கொரி. 9 : 7

**காணிக்கை அனுப்பவும், பத்திரிகை சந்தா அனுப்பவும்**
**மற்றும் சகல தொடர்புகளுக்கும் : –**

**TVGM தலைமை அலுவலக முகவரி**
BRO.STEPHEN CHRISTOPHER C.E.O.
**TAMIL VILLAGE GOSPEL MISSION (TVGM)**
"1OO-VILLAGE" SOMARASAMPETTAI
TRICHY - 620 102. TAMIL NADU, INDIA.
Ph: 0- 431 - 2607241 Cell : 94449 80445
Email : 100village@tvgm.org Web : www.tvgm.org
Founder : Bro . P.T. Christopher - Cell : 94435 44628

**டிராப்ட் , செக்,** Bank to Bank **அனுப்ப வேண்டிய முறை**

Canara Bank , Code No: 1249, Puthur Branch, Trichy - 620 017

| நோக்கம் | காணிக்கை அனுப்ப வேண்டிய விபரம் |
|---|---|
| **100 கிராம ஊழியம்,** சுவிஷேப் புத்தகம், பின்தொடர்பணி, ஜெபவீடு கட்டுதல், முழுநேர ஊழியர். | **Tamil Village Gospel Mission**<br>SB. A/c :**12491010 - 23822** Indian Origin<br>SB. A/c : **12491010 -11947** Foreign National |
| **சிறுவர் இல்லம்:** பிள்ளைகள் பராமரிப்பு, **கட்டிட நிதி, மருத்துவ நிதி,** தையற்பள்ளி | **TVGM Social service** ( 80G வரி விலக்கு உண்டு)<br>SB. A/c : **12491010 - 23805** Indian Origin<br>SB. A/c : **12491010 - 24967** Foreign National |
| **தொழுநோயாளர், விதவைகள், பார்வையற்றோர் , ஏழை, எளியவர் உதவி** | |
| **TASOL**<br>**நிலம் வாங்குதல்**<br>**உயர் கல்வி நிதி** | **The Ambassador School of Learning (TASOL)**<br>(80G வரி விலக்கு உண்டு)<br>SB. A/c : **12491010 - 38110** Indian Origin only |

| | | |
|---|---|---|
| **அனைத்து ஊழியங்களுக்கும்** | ஸ்தாபனத்தின் பெயரில் அனுப்ப முடியாவிட்டால் | Stephen Christopher<br>SB. A/c : **12491010 - 18538** |

**குறிப்பு :** காணிக்கை அனுப்பும்போது நோக்கம், உங்கள் முழுமுகவரி, தொலைபேசி, ஈமெயில் யாவும் எங்களுக்கு தெரியப்படுத்தி உதவுங்கள்.

Owned by TVGM Publication Trust and Published by Stephen Christopher from TVGM Publication Trust 4/274 Hundred village, Somarasampettai, Trichy - 620 102 printed by him at TVGM Publication Printers, C/o. TVGM Publication Trust, 4 /274 Hundred Village, Somarasampettai, Trichy 620102.

**Editor : Mr. Stephen Christopher**

REG. NEWS PAPER R.N.I. Number : TNMUL / 2000 / 4011
HUNDRED VILLAGE MINISTRY ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி
POSTAL REGISTRATION NUMBER :TRY / 013 / 2009 - 2011
Posting Date 25th at H.P.O. Trichy.

## திருச்சி - காந்திநகர் பார்வையற்றோர் காலனி





**காந்தி நகரில்** தற்சமயம் 70 பார்வையற்றோர் குடும்பங்கள் உள்ளன. சில குடும்பங்களில் கணவன், மனைவி இருவருக்குமே பார்வை இல்லை. இவர்கள் மத்தியில் **TVGM ஆராதனை / சமூகக்கூடாரம்** அமைக்க **நிலம் வாங்குவதற்கு** ஜெபித்து முயற்சித்து வருகிறோம்.

02.09.2011 அன்று **சகோ. ஸ்டீபன் , சகோ. P.T.கிறிஸ்டோபர், பாஸ்டர் தேவதாஸ்** குடும்பத்துடன் காலனியை பார்வையிட்டோம். முடிந்தால் குடும்பத்திற்கு 5 கிலோ அரிசி வீதம் 70 குடும்பத்திற்கும் மாதந்தோறும் வழங்கும்படி ஆலோசனை வழங்கினார்கள். **ஜெபியுங்கள். நிலம் 1 ச. அடி ரூ. 200 , 1 பிளாட் விலை ரூ. 4,80,000. ஜெபியுங்கள்**

To

Return Requested: TVGM ,
100 - Village,
Somarasampettai, Trichy - 620 102. India.